**பூஜாபிடியபிரதேச சபை**

**கண்டிமாவட்டம்**

------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 29 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 30 ஆம் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 யூன் 15 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியான அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, பூஜாபிடிய பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் 2014 ஆம் ஆண்டின் போது சபைக்குக் கிடைக்கப்பெற்றிருந்த எனினும், இதுவரை உரிமை மாற்றப்பட்டிராத ரூபா 6,390,000 பெறுமதியான கப் வண்டியும் உரிமை மாற்றப்பட்டிராத ரூபா 5,926,000 பெறுமதியான எனசல்மட காணி கணக்கீட்டுப் பதிவின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட காணி, கட்டிடப் பட்டோலைகளில் குறிப்பிடப்பட்ட 29 நிலையான சொத்துக்களின் பெறுமதியான ரூபா 6,641,295 உடன் நிலையான சொத்துப் பதிவேட்டில் குறிப்பிடப்பட்ட அச் சொத்துக்களின் பெறுமதியான ரூபா 590,150 ஒப்பிடப்படுகையில் ரூபா 6,051,145 தொகையான இணக்கமின்மை அவதானிக்கப்பட்டது.

#### 1.3.3 பெற வேண்டிய கணக்குகள்

2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெறவேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 44,999,227 ஆக காணப்பட்டதுடன், அவற்றில் 01 வருட காலத்திற்கு மேற்பட்ட கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 8,951,623 ஆக காணப்பட்டது.

**1.3.4 செலுத்த வேண்டிய கணக்குகள்**

2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 33,238,913 கூட்டுத்தொகையான செலுத்தவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதியில் 01 வருடகாலத்திற்கு மேற்பட்ட கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 3,283,123 ஆகக் காணப்பட்டது.

**1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

02 கணக்கீட்டு விடயங்களிற்கு உரித்தான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராததன் காரணமாக ரூபா 71,505 பெறுமதியான கொடுக்கல்வாங்கல்கள் கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**1.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்**

பின்வரும் இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு** | **இணக்கமின்மை** |
|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டம் | |
| (i) 19(i)(xi) | விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் ஆவணத்தின் மூலம் முன்னங்கீகாரம் பெறப்படாது சபையிடம் இருந்த 10 பேர்ச் காணி சமுர்த்தி அலுவலகத்தை நிர்மாணிப்பதற்காக வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது. |
| (ii) 132(ஒ) | விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் ஆவணத்தின் மூலம் முன்னங்கீகாரம் இன்றி முன்பள்ளி மாணவர்களுக்கான சீருடை பெற்றுக்கொள்ளப்படுவதற்கும் பக்மஹா உலெலவிற்காக 02 சந்தர்ப்பங்களின் போது ரூபா 76,785 தொகை செலவிடப்பட்டிருந்தது. |
| (ஆ) 1988 பிரதேச சபை (நிதி, நிர்வாக) விதி | |
| 218 | சபையிடம் உள்ள சகல காணி கட்டிடங்களும் வருடாந்தம் பரீட்சிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 1980 திசெம்பர் 31 ஆம் திகதிய 1980/14 ஆம் இலக்க உள்ளூராட்சி ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தி | 05 ஆண்டுகளுக்கு ஒரு முறை குத்தகை திருத்தப்பட வேண்டிய போதிலும், கடைகள் குத்தகைக்கு வழங்கப்பட்டு 09 ஆண்டுகள் பூர்த்தியடைந்த போதிலும் பூஜாபிட்டிய மற்றும் அங்கும்புர வியாபாரத் தொகுதிகள் மதிப்பிடப்பட்டு அறிக்கை |

பெற்றுக்கொள்ளப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 8,147,059 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 5,162,253 ஆக இருந்தமையால் நிதி விளைவுகளில் ரூபா 2,984,806 தொகையான அதிகரிப்பைக் காணக்கூடியதாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 வருமானச் சேகரிப்பின் செயலாற்றல்

செயலாளரால் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| வருமான விடயம் | 2015.01.01 உள்ளவாறானது நிலுவை மீதி | எதிர்காலப் பெறுவனவு | 2015 ஆம் ஆண்டு பட்டியல்படுத்தப்பட்டவை | மிகை அறவீடுகள் | வழங்கப்பட்ட கழிவு/பதிவழிப்புகள் | 2015 பெறுவனவு எதிர்காலப் பெறுவனவு | நிலுவை பெறுவனவு | 2015 பட்டியலிடப்பட்டவற்றில் பெறுவனவு | 2015.12.31 உள்ளவாறானது நிலுவை மீதி |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீத வரியும் வரியும் | **2,398,170** | **488,677** | **3,121,344** | **464,311** | **89,686** | **85,199** | **901,593** | **1,623,591** | **2,965,477** |
| குத்தகை | **466,450** | -- | **1,014,600** | -- | -- | -- | **412,405** | **876,865** | **191,780** |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | -- | -- | **1,458,500** | -- | -- | -- | -- | **1,458,500** | -- |
| ஏனைய வருமானம் | **6,993,584** | -- | **12,011,316** | -- | -- | -- | **5,176,662** | **5,619,066** | **8,209,172** |
| **மொத்தம்** | | | | | | | | | **11,366,429** |

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 11,366,429 தொகையான நிலுவை வருமான மீதி ஒன்று அவதானிக்கப்பட்டது.

#### 2.2.2 வீத வரி

மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் ரூபா 2,374,312 தொகையான ஓர் நிலுவை நிலவியதுடன் ஆண்டின் போதான பட்டியல்படுத்தல்கள் ரூபா 3,119,161 ஆகக் காணப்பட்டது. ஆண்டின் போதான அறவீட்டு சதவீதம் 52 ஆக மாத்திரம் காணப்பட்டதுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய

தொகை ரூபா 2,940,437 ஆகக் காணப்பட்டது. ஆம் மீதியில் 01 வருடத்திற்கு மேற்பட்ட காலம் கடந்த மீதிகளின் பெறுமதி ரூபா 1,472,719 ஆகக் காணப்பட்டது.

**2.2.3 குத்தகை**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 191,780 தொகையான குத்தகை நிலுவை மீதி காணப்பட்டதுடன் அம் மீதியில் 01 வருடத்திற்கு மேற்பட்ட காலத்திற்கு மேற்பட்ட மீதி ரூபா 22,230 ஆகக் காணப்பட்டது. 2016 மே 30 ஆம் திகதி வரையிலும் ரூபா 22,230 மேலும் அறவிடப்பட வேண்டிய நிலையில் காணப்பட்டது.

**2.2.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் இருந்தும் ஏனைய அதிகாரிகளிடம் இருந்தும் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப்பணமாக ரூபா 438,422 தொகையும் முத்திரைக் கட்டணமாக ரூபா 7,770,750 தொகையும் பெறவேண்டியதாகக் காணப்பட்டது. அம் மீதியில் ஒரு வருடத்திற்கு மேலான காலமாக நிலுவையாகக் காணப்பட்ட மீதி ரூபா 1,778,500 ஆகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல் மதிப்பீடு

மீளாய்வாண்டின் ரூபா 12,401,948 தொகை சுய தோற்றுவிப்பு வருமானமாக உழைக்கப்பட்டிருந்ததுடன் அதன் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்டிருந்த பெறுமதி ரூபா 1,281,560 ஆகக் காணப்பட்டது. இது சுய தோற்றுவிப்பு வருமானத்தில் 10.33 சதவீதமாகக் காணப்பட்டது. இதன் படி, பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் நோக்கை எய்துவதற்கு ஏற்ற வகையில் ஏற்பாட்டைப் பயன்படுத்தி அபிவிருத்திச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 3.2 முகாமைத்துவ திறமையீனங்கள்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் 12 ஊழியர் வெற்றிடங்களும் 15 மிகைப் பதவிகளும் நிலவின.

### 3.3 செயற்பாட்டுத் திறமையின்மை

கடந்த 03 ஆண்டுகளின் போது 537 கட்டிட விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றிருந்ததுடன் இதில் அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை 380 ஆகக் காணப்பட்டது. அம் 03 ஆண்டுகளின் போதும் 09 இணக்கச் சான்றிதழ்கள் மாத்திரமே விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் அங்கீகரிக்கப்பட்ட கட்டிட விண்ணப்பங்களுக்காக இணக்கச் சான்றிதழ்கள் விநியோகிக்கப்படும் முறைமை ஒன்று செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல்வாங்கல்கள்

கழிவு முகாமைத்துவ நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்துவதற்காக சபை அதிகாரப் பிரதேசத்தில் உள்ள எனசல்வத்த பெயரிலான காணியின் 09 ஏக்கர் 01 ரூட் 01.644 பேர்ச் அளவிலான பகுதி கையேற்கப்படுவதற்காக காணியின் சிக்கலற்ற தன்மை முறையாகக் கண்டுபிடிக்கப்படாது காணி மறுசீரமைப்பு சபைக்கு ரூபா 250,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. பின்னர் அக் காணி அல்கடுவ பெருந்தோட்டக் கம்பனி ஒன்றிற்கு உரித்தானதெனக் குறிப்பிடப்பட்டு அக் காணி

சபைக்கு கையேற்பதற்கு வழங்கப்பட்டிராததன் காரணமாக இதற்காகச் செலுத்தப்பட்ட ரூபா 250,000 தொகை சபை நிதியத்திற்கு நட்டமாகியிருந்ததுடன் அக் காணியைப் பொறுப்பேற்பதற்கும் முடியாதிருந்தது.

**3.5 வெளிப்படையான முறைகேடுகள்**

முன்னாள் தலைவரால் சொந்தப் பணத்தைச் செலவிட்டு மழையில் நனையாா துணி 02 (கூடாரத் துணி) கொள்வனவு செய்யப்பட்டதாகக் குறிப்பிட்டு ரூபா 31,000 தொகையான பணம் முறையற்ற விதத்தில் சபை நிதியத்தில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்டது.

**3.6 இனங்காணப்பட்ட நட்டம்**

2013 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் படி, ரூபா 657,422 பெறுமதியான 33 குழாய் நீர் உபகரணங்களின் 605 விடயங்களிப் பற்றாக்குறை தொடர்பாக உரிய தரப்பினரிடம் இருந்து அறவிடப்படுவதற்கோ ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.7 செயற்திட்டம் தாமதமாக்கல்**

ரூபா 1,000,000 தொகையான மதிப்பீட்டில் வெலே கடே பொது மலசலகூடம் மற்றும் வாசிக சாலை நிர்மாணிப்பிற்காக 2014 யூலை 04 ஆம் திகதி முல்லேகம தெற்கு சமுர்த்தி படையணிக்கு பொறுப்பேற்கப்பட்டிருந்தது. அதிக மழை காரணமாக பிகா ஒய பெருக்கெடுத்தமையால் கட்டிடப் பொருட்கள் சேதமுற்றதுடன் அவ் வேலைகள் பூர்த்திசெய்யப்படுவதற்கு முடியாதிருந்ததாக அறிவிக்கப்பட்டு காலத்தை நீடித்துத் தருமாறு 2015 சனவரி 13 ஆம் திகதி கோரப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், ரூபா 1,000,000 இற்கு உரித்தான அச் செயற்பாடு 2016 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் வாசிக சாலையின் எஞ்சிய சில வேலைகள் 2016 மே 11 ஆம் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.8 திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

சபை அதிகார எல்லைக்குட்பட்ட பகுதியில் நாளொன்றிற்கு 02 தொன் குப்பை சேகரிக்கப்பட்ட போதிலும், தும்பனே பிரதேச சபைக்கு உரித்தான திக்ஓயவத்த கழிவுப் பிரிவிற்கு டிராக்டர் லோட் 01 மாத்திரம் முறையான முகாமைத்துவமின்றி அகற்றப்பட்டிருந்ததுடன் பிரதேசத்தின் மொத்தக் கழிவு அளவும் சேகரிக்கப்படுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(அ) மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் படி, மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினம், உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினத்துடன் ஒப்பிடப்படுகையில் 06 வருமான விடயங்களின் 14

சதவீதம் முதல் 89 சதவீதம் வரையிலும், 07 செலவின விடயங்களின் 28 சதவீதம் முதல் 93 சதவீதம் வரையிலும் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டு சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 73 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 1,202,000 தொகையான ஏற்பாடுகளில் எவ்வித செலவினமும் ஏற்கப்படாது சேமிக்கப்பட்டிருந்ததுடன் 18 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த ஏற்பாட்டுத் தொகையான ரூபா 595,000 தொகை வேறு செலவின விடயங்களிற்கு மாற்றப்பட்டிருந்தது.

(இ) முன்னைய ஆண்டின் போது அபிவிருத்தித் திட்டங்களைப் பெற்று முன்னுரிமையைத் தயாரித்து எதிர்வரும் ஆண்டின் போது செயற்படுத்தப்படுவதற்கு திட்டமிடப்பட்ட செயற்திட்டத்திற்காக முறையாக தொழில்நுட்ப உத்தியோகத்தாழன் மதிப்பீடு பெற்றுக்கொள்ளப்பட்டு அம் மதிப்பீட்டுப் பெறுமதியின் படி பாதீட்டு மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு எதுவும் இன்றி அமைச்சர்களின் ஏற்பாடாக ரூபா 1,400,000 தொகையான மொத்த பெறுமதி பயன்படுத்தப்பட்டு பாதீட்டு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

## 4.2 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

மீளாய்வாண்டிற்காக வருடாந்த கொள்வனவுத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

### விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள்

சபைக்கு உரித்தான 04 வாகனங்கள் பல நாட்களாக செயலிழந்து காணப்பட்டதுடன் மேலும் 03 வாகனங்கள் விளைவற்று நிறுத்திவைக்கப்பட்டிருந்தன.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு
(உ) திண்மக் கழிவு முகாமைத்துவம்
(ஊ) சொத்து முகாமைத்துவம்